[திரு. பி.கே. சேகர்பாபு] [2022 மே 7

செய்திருக்கலாம். அந்த இடத்தை எடுக்க வந்த அதிகாரிகளை ஓர் அறையிலே வைத்துப் பூட்டுகிறீர்கள். பூட்டிவிட்டு அவர்களை வெளியிலே அனுப்பவில்லை. அதன் பிறகு அந்த மாவட்டத்தினுடைய கண்காணிப்பாளர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவல் தெரிவித்து, ஒரு பெண் ஆய்வாளர் அந்தத் திருக்கோயிலினுடைய காரியதரிசி என்று சொல்லப்படுகின்றவர், இவர்களையெல்லாம் காவல் துறைதான் வந்து விடுவிக்கின்றது. ஆகவே, சட்டப்படி நடந்திருக்கின்ற இந்தச் சம்பவத்திற்கு நீங்களும் நல்ல சம்பவமென்று வரவேற்க வேண்டும். அதேபோன்று, தற்போது 14 ஏக்கர் நிலம்கொண்ட ஒரு பரப்பளவு, இதேபோன்று ஓர் ஆக்கிரமிப்பு, நல்ல ஒரு மகான் பெயரை வைத்திருக்கின்ற அன்பிற்கினிய அண்ணன் காந்தி அவர்கள் அந்த இடத்தையும் மீட்டுத் தருகின்ற பணியிலே இறங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சட்டப்படிதான் இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டிருக்கின்றது. திருக்கோயில்வசம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றது. ஆகவே, இதை வரவேற்று நன்றி கூறுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அருமை அண்ணன் காந்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் உட்காருங்கள்.*

(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.ஆர். காந்தி, திருமதி வானதி சீனிவாசன் மற்றும் டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 மே 7] [திரு. துரைமுருகன்]

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*